# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.

**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ L.L.M.,**
**( J.O.Code No.TN 02207)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், சித்திரை திங்கள் 14ம் நாள்**

**இ.ம.எண்.243/2026**
**இன்**
**அ.வ.எண்.340/2017**

சஞ்சீவி ..மனுதாரர்/1ம் பிரதிவாதி

..எதிர்..

1. ரத்தினம் (இறப்பு)
2. ராஜேஸ்வரி
3. விஜயா
4. மகேஸ்வரி ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

கடந்த 24.04.2026ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.N.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.வெங்கடாசலம் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்து விட்ட நிலையிலும், நிகழ்த்திய இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 8 விதி 1Aன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அசல் வழக்கை முடிவு செய்ய முக்கியமான ஆவணங்கள். மனு ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது. எனவே, மனு ஆவணங்களை மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு ஆவணங்களை மனுதாரர் எதிர்வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி பல வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டும், அதனை பயன்படுத்தாமல் அசல வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்தோடு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5.** மனுதாரர் தரப்பில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ?என்பதே ஆகும்.

6. <u>தீர்வு</u> :–

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனு ஆவணங்கள் அசல் வழக்கின் தீர்விற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும், அதனை தாக்கல் செய்யாவிட்டால் மனுதாரர்/1ம் பிரதிவாதியால் அவரது வழக்கை நிரூபிக்க இயலாது என்றும், வருவாய் அலுவலர்களால் கடந்த பிப்ரவரி மாதம் தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதால் அதனை முன்பே மனுதாரரால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எதிர்மனுதாரர்களின் எதிருரையில் நீதிமன்ற ஆணையரின் மறு ஆய்வு கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதியின் சுவாதீனத்தை நிரூபிப்பதற்கு மனு ஆவணங்கள் அவசியமானவை என்பதால் மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது மனு ஆவணங்கள் அதனுடன் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இந்நீதிமன்றத்தால் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் மனு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6.4** அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இரு தரப்பினருக்கும் அவர்களது தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை தாக்கல் செய்வதற்கு போதிய வாய்ப்பளித்து தாவா அசல் வழக்கில் தீர்வு காண்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ம் நாள் அவையறிய பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.04.27 15:09:56 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.04.27 15:10:02 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.